# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.**DEGREE EXAMINATION – **TAMIL LITERATURE**

SECOND SEMESTER – **APRIL 2018**

**17/16UTL2RL01– GENERAL TAMIL - IDAIKKALA ILAKKIAM**

Date: 17-04-2018 Dept. No. Max. : 100 Marks
Time: 01:00-04:00

**பகுதி - அ (10 X 2 = 20 மதிப்பெண்கள்)**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வருஞ்செல்லும் பேருமென் நெஞ்சு - பொருள் யாது?
02. முதற் குலோத்துங்கச் சோழனிடம் தோற்ற பாண்டியர் படைகள் எங்ஙனம் அழிவுற்றன?
03. பாலைநிலத்து மரத்தின் காட்சியாக கலிங்கத்துப்பரணி குறிப்பிடுவது யாது?
04. முக்கூடலின் சிறப்புகளுள் இரண்டினைக் குறிப்பிடுக.
05. சிங்கியின் அழகு எங்ஙனம் விளங்குகிறது?
06. பிள்ளைத்தமிழ் பருவங்களில் நான்கினைக் குறிப்பிடுக.
07. இஸ்ரயேல் மக்களுக்கு இறைவன் அளித்தப் பரிசு யாது?
08. திருக்காவலூர்க் கலம்பகத்தை இயற்றியவர் யார்?
09. கித்தேரியிடமிருந்து அறம் எங்ஙனம் தோன்றியது?
10. சேர்த்தெழுதுக.
விழி + புனல் = நல்ல + பையன் = பவளம் + செவ்வாய் = பாம்பு + பாம்பு =

**பகுதி - ஆ (5 X 7 = 35 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. நும்பாடப்பகுதியில் அமைந்துள்ள சோழர் குறித்த முத்தொள்ளாயிரப் பாடற் கருத்துகளை எழுதுக.
12. நந்திவர்மனின் பெருமைகளாக நந்திக்கலம்பகம் குறிப்பிடும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.
13. முக்கூடற்பள்ளு தென்கரையின் வளம் நிறைந்த காட்சிகளை எங்ஙனம் விவரிக்கின்றது?
14. ஐவகைப் பாக்கள் குறித்து தமிழ்விடுதூது கூறுவன யாவை?
15. பெத்லேகம் குறவஞ்சி சுட்டும் கட்டியங்காரனின் தோற்றம் யாது?
16. திருக்காவலூரில் குடிகொண்ட மரியன்னையின் உருவச் சிறப்பினை வீரமாமுனிவர் எங்ஙனம் வருணிக்கிறார்?
17. தேவமாதாவின் வேறுபெயர்களுள் பதினைந்தினைக் குறிப்பிடுக.

**பகுதி - இ (3 X 15 = 45 மதிப்பெண்கள்)**

**மூன்றுபக்க அளவில் விடையளிக்க**

18. சேரன் மற்றும் பாண்டியர்களின் பெருமைகளை முத்தொள்ளாயிரப் பாடல் வழிநின்று விளக்குக.

**( அல்லது )**

கதவைத்திறந்திட வலியுறுத்திப் பாடும் கலிங்கத்துப்பரணியின் கடை திறப்பு
பாடற் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

19. சிங்கியின் அழகினைக் குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர் எங்ஙனம் வருணித்துப் பாடுகிறார்?

**( அல்லது )**

பெத்தலேகம் குறவஞ்சியில் இடம்பெறும் திருவிவிலியச் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

20. கித்தேரியம்மாள் அம்மானையில் இடம்பெறம் மணமறுத்தக் காதைச் செய்திகளை எழுதுக.

**( அல்லது )**

தேவமாதா அந்தாதியின் நூற்சிறப்பினை விவரி.

______________